அபுதாபியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற

# குவைத் வாழ் தமிழ் மாணவனுக்குப் பாராட்டு விழா!

## சிதம்பரம் ந. தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது!





குவைத், செப்.13-

அபுதாபியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் பல சாதனைகள் படைத்து வெள்ளி மற்றும் தங்கப் பதக்கங்கள் பெற்ற "குவைத் வாழ் தமிழ் மாணவனுக்கு பாராட்டு", தி.மு.க., அயலக அணி. குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தினர்.

தமிழன் எங்கு இருப்பினும் தமிழனே, தமிழனோடு கரம் கோர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே எனும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர், திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைப்படி,

கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா மு.எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி

இளம் வயதில் சதுரங்க போட்டிகளில் பல சாதனைகள் படைத்து , அபுதாபி சர்வதேச சதுரங்கப் போட்டியில் பல பதக்கங்கள் வென்ற தமிழகத்தை சேர்ந்த குவைத் மாணவர் மித்திலேஷ் ரஞ்சித் குமாரை, தி.மு.க., அயலக அணி குவைத் நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தினர்.

அபுதாபியில் 2026 ஆகஸ்ட் 15 முதல் 26 வரை நடைபெற்ற 32வது அபுதாபி சர்வதேச சதுரங்க விழாவில் உலகின் சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவை பிரதி நிதித்துவப்படுத்தி, தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்த வரும், தற்போது குவைத்தில் வசித்து வரும் ரஞ்சித் குமார் - சாந்தி தம்பதியரின் மகனுமான மித்திலேஷ் ரஞ்சித்குமார், பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக விளையாடி பதக்கங்கள்,கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வென்று சாதனை படைத்துள்ளார்.

குவைத்தில் உள்ள கல்ஃப் இந்தியன் ஸ்கூல் பள்ளியில் கல்வி பயிலும் மித்திலேஷ், இந்தப் புகழ் பெற்ற போட்டியில் 4வது முறையாக பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

அபுதாபியில் நடந்த சதுரங்க போட்டிகளில்

மித்திலேஷ் பெற்ற சாதனைகள்:

ஸ்கூல் U15 பிரிவு - தங்கப் பதக்கம்

ஜூனியர் ஓபன் பிரிவு - வெள்ளிப் பதக்கம்

அகாடமி பிரிவு - வெள்ளிப் பதக்கம் ஓபன் A பிரிவு - 9வது இடம்.

மேலும் பல கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகள் பெற்றுள்ளார்

கடந்த ஆண்டு இதே சர்வதேச போட்டியின் ஜூனியர்ஸ் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாம்பியன் பட்டம் பெற்ற மித்திலேஷ், இந்த ஆண்டும் தனது திறமையை நிரூபித்து தொடர்ச்சியான வெற்றிகளைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஆண்டு சாம்பியன் பட்டம் பெற்ற மித்திலேஷ் ஐ பாராட்டி தி.மு.க. அயலக அணி குவைத் சார்பில் "இளம் சாதனையாளர்" விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இளம் வயதிலேயே சர்வதேச அளவில் சாதனைகள் படைத்து வரும் மித்திலேஷ் ரஞ்சித்குமார், இந்தியா, தமிழ்நாடு மற்றும் குவைத் தமிழ் சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்த செய்தியறிந்த குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணியின் நிர்வாகிகள் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார்,

தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் எஸ்.செந்தில்குமார் ஆகியோர் நேரில் சென்று அவரை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

மேலும் அவர் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தி.மு.க. துணை நிற்கும் என உறுதி அளித்தனர். கழக நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தியது இந்த மாணவனுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்தது. மேலும் அவரின் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.



தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.சார்பில் முதல்வர் விஜய்யின் ஆணவப் பேச்சை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாவட்ட செயலாளர் ஈ.ராஜா ஆகியோர் தலைமையில் தென்காசி மரு. ராணி ஸ்ரீ குமார் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன் (தென்காசி) தி.மு. இராசேந்திரன் (கடையநல்லூர்) முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவ பத்மநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.உடன் கழக நிர்வாகிகள் மா. செல்லத்துரை,அப்துல் காதர்,சாதிர், திவான் ஒலி,ஷேக் தாவுது,ஆறுமுகசாமி, முத்துச்செல்வி,கென்னடி, தமிழ்ச்செல்வி, சேசுராஜன்,செண்பக விநாயகம்,லாலா சங்கரபாண்டியன், அழகுசுந்தரம்,ரமேஷ் புனிதா,கருப்பண்ணன் உள்பட சுமார் 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கையில் பதாகைகளை ஏந்தியபடி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கு ரசாயன கலவை உடனே பூச வேண்டும் – இல்லாவிட்டால்

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் போராட்டம் நடைபெறும்!

## மாவட்டச் செயலாளர் - வழக்கறிஞர் ரெ.மகேஷ் அறிக்கை!



கன்னியாகுமரி, செப்.13-

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பொற்கரத்தால் 01.01. 2000ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை யானது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த சிலை உப்புக்காற்று மற்றும் வெயிலால் பாதிக்கப்படுவதைத் தடுக்க, 4 வருடங்களுக்கு ஒருமுறை ரசாயனக் கலவை (முலாம்) பூசப்படும். சிலைக்கு இறுதியாக 2022ம் ஆண்டு ரசாயனக் கலவை பூசப்பட்டது. அதுபோல அடிக்கடி ஏற்படும் மின்தடையால் திருவள்ளுவர் சிலையை சுற்றியுள்ள மின்விளக்குகள் எரிவதில்லை. மேலும், மழைக்காலங்களில் மழைநீரானது காற்றின் போக்கிற்கு தகுந்தாற்போல் சிலையின் பீடத்தில் உள்ள ஜன்னல் திறப்புகள் மற்றும் நுழைவு வாயில் திறப்புகள் வழியாக உட்புகுவதால் பீடத்திலுள்ள கற்கள் சிதிலமடையும் சூழல் உள்ளது. எனவே, அய்யன் திரு வள்ளுவர் சிலைக்கு ரசாயனக் கலவை (முலாம்) பூசு வதற்கும், மின்விளக்குகள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணவும், நான்கு புற நுழைவு வாயில் மற்றும் ஜன்னல் திறப்புகளில் மழைநீர் புகாமல் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டி கடந்த 17.06.2026 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரிடம் கடிதம் அளித்திருந்தேன்.

இதுநாள் வரை மாவட்ட நிர்வாகம் சிலைக்கு ரசாயன கலவை பூசுவது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.


கன்னியாகுமரியில் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரத்தால் 30.12.2024 அன்று அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறையை இணைக்கும் வகையில் ரூபாய் 37.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட கண்ணாடி இழைகூண்டு பாலம் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை போற்றும் விதமாக கடந்த 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி தமிழ்நாடு அரசால் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. பிரமாண்டமாக உயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்கும், கண்ணாடி இழை கூண்டு பாலத்தில் நடப்பதற்கும் உலகளவில் இருந்து சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வர மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது கன்னியாகுமரி கடல் பகுதியில் அடிக்கடி ஏற்படும் காலநிலை மாற்றத்தால் கடல் சீற்றம் ஏற்படுவதால் காற்றின் வேகம் காரணமாக அலையில் இருந்து வீசும் உப்புக் காற்று சிலை மீது உப்பு துகள்களாக படிந்துள்ளது. இதனால் சிலையின் பீடத்தில் உள்ள உட்பகுதிகளில் உப்புநீர் கசிவு ஏற்பட்டுள்ளது. மேலும் சிலையின் இணைப்பு பகுதிகளில் சிறிய அளவிலான வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளது. எனவே, உப்பு காற்றில் இருந்து சிலையை பாதுகாக்கும் விதமாக உடனடியாக சிலைக்கு ரசாயன கலவை பூசும் பணியினை தமிழ்நாடு அரசு விரைந்து தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு உடனே முலாம் பூசுவதற்கான பணிகளை தொடங்கவில்லையேனில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் போராட்டம் நடைபெறும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுராந்தகம் – தாராபுரத்தில் இடைத்தேர்தல்:

# தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு தமிழ் மாநில தேசிய லீக் ஆதரவு!

## திருப்பூர் அல்தாப் அறிக்கை!



சென்னை, செப்.13-

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. விற்கு தமிழ் மாநில தேசிய லீக் ஆதரவு என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

தமிழகத்தில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில், மதச்சார்பின்மை, சமூகநீதி மற்றும் தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயல்பட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கு, தமிழ் மாநில தேசிய லீக் முழு ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, சிறுபான்மையினர் நலன், கல்வி, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதி செய்து வந்துள்ளது. எனவே, இந்நிலை வலுப்பெற இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய தமிழ் மாநில தேசிய லீக் நிர்வாகிகள் ஜி.சம்சுதீன், ஹாஜா நஜ்முதீன், திருவான்மியூர் ஹாஜா, அல்லாபகஷ் மற்றும் தொண்டர்கள் எனது தலைமையில் பாடுபடுவார்கள்.


தி.மு.க. வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு வாக்காள பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி.எஸ்.ராஜபூசனம்**

**செப்டம்பர் 13 (2021)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தின் இணைந்து பணியாற்றியவர்.

சென்னை, ஆயிரம்விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

42 ஆண்டுகாலமாக இராசாங்கம் நினைவு மன்றத்தின் தலைவராக பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்தவர்.

வருமானவரித் துறை ஊழியர் கூட்டமைப்பின் தலைவர், தமிழ்நாடு தொழிற்சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

காலை உணவுத் திட்ட பெயர்ப் பலகைக்கு

# தலைமை ஆசிரியர்களை செலவு செய்யச் சொல்வதா?

## ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் நா,சண்முகநாதன் கண்டனம்!



புதுக்கோட்டை, செப்.13-

காலை உணவு விரிவாக்க திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என பெயர் மாற்றம் செய்து அதற்கான பெயர் பலகை அமைப்பதற்கு நிதி ஆதாரம் எதுவும் வழங்காத நிலையில் தலைமையாசிரியர்கள் உடனடியாக பெயர்பலகை வைத்து புகைப்படத்தினை அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிடுவது ஆசிரியர்களுக்கு வேதனையை தருகிறது என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மை குழு மறு கட்டமைப்பு செய்ய பெற்றோர் விழிப்புணர்வு கூட்டம் நடத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து மறு கட்டமைப்பு கூட்டம்நடத்த வேண்டும். புதிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என கூறி விடுமுறை நாட்களிலும் கூட்டம் நடத்துவது, பார்வையாளர்களாக தொலைதூரத்தில் உள்ள பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பது போன்ற செயல்களில் ஆசிரியர்களை தொடர்ந்து விடுமுறை நாளில் பணியில் ஈடுபடுத்துவது ஏற்புடையது அல்ல. இது ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தினை உருவாக்கி உள்ளது.

அது மட்டுமல்லாமல் காலை உணவு விரிவாக்க திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என பெயர் மாற்றம் செய்ததை வரவேற்கிறோம்.அதே வேலையில் அதற்கான பெயர் பலகை அமைப்பதற்கு நிதி ஆதாரம் எதுவும் வழங்காத நிலையில் தலைமையாசிரியர்கள் உடனடியாக பெயர்பலகை வைத்து புகைப் படத்தினை அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிடுவது வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த ஆட்சியில் பெயர் பலகை நிறுவும் செலவினை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்றுக் கொண்டன.

தற்போது ஆசிரியர்கள் தனது சொந்த செலவில் பெயர்ப் பலகை அமைப்பது என்பது ஆசிரியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது எனவே தமிழக அரசு உடனடியாக அதற்கான நிதி ஆதாரம் பற்றி தெளிவாக அறிவிக்க வேண்டும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**லேனா (எ) இரா. இலக்குமணன்**

**செப்டம்பர் 13 (1998)**



கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**